Rotary

Rotary Opens Opportunities

best
be excellent in Serving together

கோட்டை முரசு

# KOTTAI MURASU



**Rtn. HOLGER KNAACK**
RI President



**Rtn. A.L. CHOKKALINGAM**
District Governor

**RID 3000** | **GOVERNOR'S MONTHLY LETTER** | **AUGUST 2020 | ISSUE-2**



## AUGUST-MEMBERSHIP DEVELOPMENT MONTH

www.rotary.org

www.rotaryindia.org

# From the pen of the Governor



அன்பு நண்பர்களே,

ரோட்டரி ஆண்டில் ஆகஸ்ட் மாதம் மிக முக்கியமான மாதமாகும். ஏனென்றால், ரோட்டரி என்கிற ஆலமரத்தைத் தாங்குகின்ற வேர்களாகவும், விழுதுகளாகவும் விளங்கும் “உறுப்பினர் சேர்க்கை”, தக்கவைத்தல், விரிவாக்கம் ஆகியவை குறித்து சிந்திக்கவும், செயல்படவுமான மாதமாகும். ரோட்டரி உறுப்பினர்கள் எண்ணிக்கை உலகளவில் கடந்த கால் நூற்றாண்டில் பெரிய முன்னேற்றமில்லாமல் இருப்பது கவலைக்குரிய தகவலாகும். ஆனால் இந்தியாவில் தொடர்ந்து வளர்ச்சியிருந்தாலும், நமது மக்கள் தொகைக்கு ஏற்ற வளர்ச்சி இல்லை. நமது மாவட்டத்திலும், ஒவ்வொரு ஆண்டும் உறுப்பினர் வளர்ச்சி இருந்தாலும், ரோட்டரியை விட்டு வெளியேறுவோர் எண்ணிக்கையும் அதிகமாகவே உள்ளது. இது நாம் அனைவரும் மிகுந்த கவலையுடன் கவனிக்க வேண்டியதாகும். இவ்வாறு வெளியேறுவதற்கு முக்கியக் காரணம், அவர்களை சேர்ப்பதற்கு முன், அவர்கள் ரோட்டரி உறுப்பினராக இருப்பதற்கு ஏற்றவரா என்று கவனிக்காமல் சேர்ப்பதும், ரோட்டரிக்கு ஏற்றவர்களைச் சேர்த்தாலும், அவர்களுக்கு ரோட்டரியின் சிறப்புகளையும், ரோட்டரியில் உறுப்பினர்களுக்கு கிடைக்கும் நன்மைகளையும் அவர்களிடம் சரியாக எடுத்துக் கூறாமையும் தான் முக்கியமான காரணங்களாகும். எனவே நாம் best ஆண்டில் சேர்க்கும் ஒவ்வொரு உறுப்பினரையும் தேர்வு செய்து சேர்ப்பதுடன், அவர்களுக்கு ரோட்டரி பற்றி நன்கு எடுத்துக் கூறி, ஒருவர் கூட ரோட்டரியை விட்டு வெளியேறாமல் பார்த்துக் கொள்வோம் என்று நாம் ஒவ்வொருவரும் உறுதிமொழி எடுத்துக்கொண்டால் அதுவே ரோட்டரிக்கு நாம் செய்யும் மிகச் சிறந்த பணியாகும்.

We will bring the best members to Rotary in our best year.

அன்புடன்

**Rtn. அ.லெ.சொக்கலிங்கம்**
மாவட்ட ஆளுநர்

## From the Editor's Desk



Dear Rotarians,

One month has gone by and we have eleven more to go. Eleven more months to achieve our targets and realize our dreams. It's time to put the pedal to the metal.

August has been designated by RI as the month for Membership and New Club Development. The scope and scale of our projects depend on the strength of our members. A club could easily accomplish more if it has active members from a wide spectrum of professions who wish to serve society. It is indeed challenging to identify new members – and even more so to keep everyone engaged and happy. It is the duty of the senior members of the club to make them feel welcome and special and thus increase membership retention.

The editorial team thanks the clubs who have been regularly sending us details of their projects. We request all the clubs to do so – and in addition, please keep those articles coming in.

Yours in Rotary Service,
**Rtn. Dr. Jayson Keerthy Jayabarathan,** M.Tech., Ph.D,
GML Editor.

## EDITORIAL TEAM



Rtn. **Dr. Jayson K. Jayabarathan**
Editor



Rtn. **RM. Lakshmanan**
Co-Editor



Rtn. **M. Kumarappan**
Co-Editor



Rtn. **V. Rajendran**
Associate Editor



Rtn. **Alaguraam Jothi**
Associate Editor



Rtn. **Vinitha Mohan**
Associate Editor

# Message from the First Lady



அன்புள்ள ரோட்டரி உறவுகளே,

நமது 'கோட்டை முரசு' மூலம் உங்களைச் சந்திப்பதில் நான் மிக்க பெருமையடைகின்றேன். நமது பெண் உறுப்பினர்களைக் கொண்ட சங்கங்கள் எல்லாம் மிகச் சிறப்பாகச் செயல்படுவது மிக்க மகிழ்ச்சியாக உள்ளது. பெண்கள் எதைச் செய்தாலும் சிறப்பாகச் செய்யக் கூடியவர்கள். மேலும் "ரோட்டரிக்கு பெண்களும்" "பெண்களுக்கு ரோட்டரியும்" அவசியம் என்பதை ரோட்டரி சங்க முன்னாள் தலைவராக நான் நன்கு அறிவேன். எனவே இந்த 'உறுப்பினர் வளர்ச்சி' மாதத்தில் நம் மாவட்டத்தில் பெண் உறுப்பினர்கள் எண்ணிக்கையை இரண்டு மடங்காக ஆக்க வேண்டுகிறேன்.

அன்புடன் உங்கள் சகோதரி

**சொ. பவாணி**

# நாடு அதை நாடு



ரோட்டரி உறவுகள் அனைவருக்கும் சுதந்திர தின வாழ்த்துக்கள். "நாடு" இந்த ஒற்றை இலக்கை அடைவதற்கு நம் முன்னோர்கள் செய்த தியாகங்கள் எத்தனை எத்தனை. இழந்தவை எத்தனை எத்தனை. இந்த நேரத்தில் அவர்களை நன்றியுடன் நினைவு கொள்வோம். நாடு என்பது வெறும் கல்லையும் மண்ணையும் மட்டுமே குறிப்பதல்ல. அனைத்து உயிரினங்களையும் உள்ளடக்கியது தான் நாடு.

இயற்கையாகவே தமிழில் நாடு என்றால் நாட்டம் என்று பொருள். நாட்டத்திற்கு பற்று என்றொரு பொருள் உண்டு. அதனால் தான் நாட்டுப்பற்று என்று சொல்கிறோம். அதனால் தான் "நாடு அதை நாடு" என அழுத்தமாகச் சொல்கிறோம். நாட்டை நேசிப்பது என்பது நாட்டுமக்கள் அனைவரையும் மதம் கடந்து, இனம் கடந்து, மொழி கடந்து சகோதரர்கள் என்ற உணர்வோடு நேசிக்க வேண்டும்; வாழ வேண்டும். இதையே ரோட்டரி நமக்கு போதிக்கிறது. நாடு அமைதியாக இருந்தால் தான் மாநிலம் அமைதியாக இருக்கும். மாநிலம் அமைதியாக இருந்தால் நாம் இருக்குமிடம் அமைதியாக இருக்கும். இதில் எந்த இடத்தில் பாதிப்பு ஏற்பட்டாலும் அனைவருக்கும் பாதிப்பு தான். அண்டை வீட்டில் அமைதி இல்லை என்றால் நம் வீட்டிலும் அமைதி இருக்காது. எனவே நாடும், நாட்டு மக்களும் அமைதியாக மகிழ்ச்சியாக இருக்க நாம் விரும்புவோம். அதற்கான செயல்களை முன்னெடுப்போம்.



"நாடு அதை நாடு இல்லாவிட்டால் ஏது வீடு"

நன்றி

**Rtn. R. சௌந்தரபாண்டியன்**
**Chairman, Pre AGTS**
**RC of Theni**



**RI Exchange Rate - Rs. 75 to 1 USD August 2020**

# ரோட்டரி சங்கங்களின் வகைகள்

ரோட்டரி சங்கம் என்பது 1.2 மில்லியன் சுற்றம், நட்பு, தலைவர்கள், தீர்வாளர்களை உள்ளடக்கிய ஓர் சமூகசேவை அமைப்பாகும். இவ்வமைப்பு உலகில் உள்ள பலதரப்பட்ட மக்களை இணைத்து புதிய செயல் திட்டங்களை உருவாக்கி உலகளாவிய சமூகத்திலும் நம்மிடையேயுமான நிலையான மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய திறன் கொண்ட அமைப்பு ஆகும்.

| சங்கப் பெயர் | சங்கத்தின் விளக்கம் | உறுப்பினர்கள் செயல்திட்டம் | குறைந்த பட்சம் உறுப்பினர்கள் |
|---|---|---|---|
| பாரம்பரிய ரோட்டரி சங்கம் Traditional Rotary Club | சுய வளர்ச்சி மற்றும் சமூக சேவைக்காக தொடர்ந்து சந்திக்க விரும்பும் தொழில் வல்லுநர்கள். ஆர்வமிக்க தலைவர்களை உறுப்பினர்களாகக் கொண்ட சங்கம் | இணைந்து பாரம்பரியமிக்க சேவையை சமூகத்திற்கு ஆற்ற காத்திருக்கும் சமூக ஆர்வலர்கள் | 20 |
| செயற்கைக்கோள் சங்கம் Satellite Club | தனக்குரிய தனிப்பட்ட செயல்திட்டங்கள் கூட்டங்கள் விதிமுறைகளைக் கொண்ட பாரம்பரிய மிக்க ரோட்டரி சங்கத்தால் ஆதரவளிக்கப்பட்ட சங்கம் | அந்தப் பகுதியிலுள்ள பாரம்பரியமிக்க சங்கச் செயல்பாட்டைக் காட்டிலும் கூட்ட வரைமுறை, நேரம் ஒதுக்கீடு, அதிக அனுபவம் ஆகியவற்றில் கூடுதலாக செயலாற்ற விரும்புபவர்கள். | 8 |
| மின்னணுச் சங்கம் e-Club | இணைய வழியில் மட்டுமே செயல்படும் சங்கம் | அடிக்கடி அயல்நாடு, அயல் மாநிலங்கள், பயணம் மேற்கொள்பவர்கள், நேரில் வந்து சந்திக்க இயலாத வேலைப் பளு மிக்கவர்கள், இணைய வழி அனுபவத்தை விரும்புபவர்கள் | 20 |
| கடவுச் சீட்டு சங்கம் Passport Club | ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான கூட்டங்களில் தொடர்ந்து பங்கேற்றவர்கள், அடுத்த ரோட்டரி சங்கங்களின் கூட்டங்களில் பங்கேற்க அனுமதி தரும் சங்கம் | அடிக்கடி பயணம் மேற்கொண்டு பல சங்கங்களின் பலதரப்பட்ட அனுபவங்களைப் பெற்று ஏராளமான புதிய நண்பர்களுடன் தொடர்பு கொள்ள விரும்புபவர்கள் | 20 |
| பெருநிறுவனச் சங்கம் Corporate Club | ஒரே நிறுவனத்தில் பணியாற்றும் பணியாளர்களை உறுப்பினர்களாகக் கொண்ட சங்கம் | ஒருங்கிணைந்து சமூக சேவையாற்ற விழையும் ஒரே நிறுவனத்தைச் சார்ந்த பணியாளர்கள் | 20 |
| வரையறுக்கப்பட்ட காரணத்திற்கான சங்கம் Cause based Club | வரையறுக்கப்பட்ட காரணத்திற்காக, குறிப்பிட்ட பகுதியில் கவனமுடன், விருப்பமுடன் செயல் திட்டங்களை செயல்படுத்த விரும்பும் உறுப்பினர்களைக் கொண்ட சங்கம் | ஒரு குறிப்பிட்ட சமூகப் பிரச்சனைக்காக தீர்வினைப் பெற இணைந்து செயல்பட விரும்பும் மக்கள் | 20 |
| ரோட்டரி சங்க முன்னாள் உறுப்பினர்கள் சங்கம் Alumni-based Club | ரோட்டரி சங்க முன்னாள் உறுப்பினர், ரோட்டரி அறக்கட்டளை சார்ந்த நிகழ்வுகளின் பங்கேற்பாளர்களை உறுப்பினராகக் கொண்ட சங்கம் | சங்கச் செயல்பாட்டிற்காக சங்கத்திற்கு வெளியிலிருந்து ஆதரவளிக்கும் மக்கள் | 20 |
| ரோட்ராக்ட் சங்கம் Rotaract Club | 18 முதல் 30 வயதுக்குட்பட்ட இளைஞர்கள், ரோட்டரி சங்க ஆதரவுடன் அதன் செயல் திட்டங்களில் பங்கேற்று பணியாற்றுவோரை உறுப்பினர்களாகக் கொண்ட சங்கம் | இளையோர் தம் சமூகத்திற்கு சேவை புரியவும், தலைமைப் பண்பு, தொழில் மேம்பாட்டுத் திறனை வளர்க்கவும், மக்கள் சேவையில் மகிழ்ச்சியடையவும் விரும்புபவர்கள் | குறிப்பிட்ட எண்ணிக்கை கிடையாது |

ரோட்ராக்ட் சங்கம் தவிர மற்ற அனைத்து ரோட்டரி சங்கங்களும் மாதம் இருமுறையாவது சங்கக் கூட்டங்களை நடத்த வேண்டும், எல்லா உறுப்பினர்களும் 68 US டாலர் ஆண்டுச் சந்தாவாக கட்ட வேண்டும். இவற்றிற்கான விபரங்கள் சர்வதேச ரோட்டரி சங்க தரவுத்தளத்தில் இடம் பெற்றிருக்கும். இவர்களுக்கு வாக்களிக்கும் உரிமையும் வழங்கப்படும்.

ரோட்டரி சங்கத்தில் உறுப்பினராக இணைவது எளிமையான ஒன்றேயாகும். 18 முதல் 30 வயதுக்குட்பட்டவர்கள் ரோட்ராக்ட் சங்கத்திலும் இளம், நடுத்தர வயதினர் ரோட்டரி சங்கத்திலும் உறுப்பினராக இணையலாம்.

தனிமனித ஒழுக்கம், நேர்மைப்பண்பு, சிறந்த தலைமைத்துவம். செய்யும் தொழிலிலும், ஆற்றும் பணியிலும் நேர்மையாக வாழும் சமூகத்தில் மேன்மைமிக்க செயல்பாடு, சமூகத்திற்காக உழைக்க விருப்பம், தன் செயலாலும் ஒரு உலகளாவிய தாக்கத்தை ஏற்படுத்துதல் உள்ளிட்ட குணங்களைக் கொண்டவர்கள் உறுப்பினராகலாம்.



ஒவ்வொரு சங்கங்களும் அவற்றிற்கான தனிப்பட்ட தேவைகள் அடிப்படையில் ஈடுபாட்டுடன் செயல்படும். ஒவ்வொரு சங்கங்களும் ஒன்றுக்கொன்று ஒரே மாதிரியான செயல்பாடு உள்ளவையாக இருக்காது. ஆனால் எல்லாச் சங்கங்களும் ஒரே மாதிரியான மதிப்புடையவை.

**Rtn. PL. சிதம்பரம்**
**Chairman, District Membership**
**RC of Madurai Metropolis**




# மழைநீர் சேகரிப்பு
# மண்ணுக்கும் மனிதனுக்கும் பாதுகாப்பு

அன்பு நண்பர்களே! அனைவருக்கும் ரோட்டரி வணக்கம்!

**நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்**
**வான்இன்று அமையாது ஒழுக்கு**

இது வள்ளுவன் வாக்கு. எத்தனை பெரியவரானாலும் நீர் இல்லாமல் வாழ முடியாது. அந்த நீரை மழையில்லாமல் பெற முடியாது. நீரின் அவசியத்தையும், முக்கியத்துவத்தையும் உணர்த்தும் குறள் இது.

இன்றைய உலகில் நீர் என்பது திரவத்தங்கம் என அழைக்கப்படுகிறது. தண்ணீர் இன்றி நம் வாழ்வு என்பதை நம்மால் கற்பனை செய்து கூடப் பார்க்க முடியாது. நாம் வாழும் இந்த பூமி 71 சதவீதம் நீரால் சூழப்பட்டு இருந்தாலும், அதில் நாம் குடிப்பதற்கு ஏற்ற நல்லநீர் வெறும் 3 சதவீதம் மட்டுமே. மேலும் நீர் என்பது அள்ள அள்ளக் குறையாத அமுதசுரபி அல்ல. ஆனால் இயற்கை மழை நீராக நமக்கு அள்ளிக் கொடுத்துக் கொண்டு தான் உள்ளது. குறிப்பிட்ட பருவங்களில் மட்டும் மழைநீரை, குடிநீரின் அவசியத்தை உணர்ந்து, நேரடியாக சேகரிப்பதும் அல்லது பூமிக்குள் செலுத்துவதும் மழைநீர் சேமிப்பாகும்.

நாம், நம் தலைமுறைக்கு பெரிதாக எதையும் சேர்த்து வைக்காவிட்டாலும் பரவாயில்லை. இயற்கை கொடுக்கும் கொடையான மழைநீரை சேமித்து வைத்தாலே போதுமானது.

நூறு ஆண்டுகளுக்கு முன்பே செட்டிநாட்டு வீடுகளில் மழைநீர் சேகரிப்பு திட்டம் மிகச் செம்மையாக செயல்பட்டு வருகின்றது. வீடுகள், பள்ளிகள், அரசு அலுவலகங்கள் போன்ற அனைத்து கட்டுமானங்களிலும் மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைப்பதை கட்டாயமாக்க வேண்டும். இது குறித்து சட்டம் நிறைவேற்றி இருந்தாலும் அனைத்து வீடுகளிலும் மழைநீர் சேமிப்பு அமைப்பு இல்லை.




அன்பு ரோட்டரி நண்பர்களே, நாம் இப்போதாவது விழித்துக் கொள்வோம். முதலில் நமது வீடுகளில் இத்திட்டத்தைச் செயல்படுத்துவோம்.

நமது வருங்கால சந்ததியினரை வறட்சியில் வாழாமல் வழி செய்வோம்! நன்றி!


**Rtn. B. முருகானந்தம்**
**District Joint Secretary, Water Management**
**RC of Trichy Gems Innovators**

# MEMBERSHIP STATISTICS


**ROTARIANS BY GENDER - GLOBAL**




**ROTARIANS BY GENDER - INDIA**




**TOP 10 COUNTRIES BY MEMBERSHIP**




* Data as on 13.08.2020 from RI

# Membership Development

அன்பு ரோட்டரி நண்பர்களே,

வணக்கம், மாவட்ட ஆளுநரின் மாத இதழான "கோட்டை முரசு" மூலம் என்னுடைய எண்ணங்களை உங்களோடு பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். ரோட்டரியில் ஆகஸ்ட் மாதத்தை "உறுப்பினர் வளர்ச்சி" மாதமாக சிறப்பாகக் கொண்டாடுகிறோம். ஒரு கட்டடத்திற்கு அடித்தளம் எவ்வளவு முக்கியமோ, ஒரு மரத்திற்கு ஆணி வேர் எவ்வளவு முக்கியமோ, அதே போல ஒவ்வொரு அமைப்புக்கும் உறுப்பினர்கள் முக்கியம். அதே போலத்தான் ரோட்டரிக்கும் உறுப்பினர்கள் தான் அதனுடைய பலம். ஒவ்வொரு RI தலைவரின் முதல் குரல் உறுப்பினர் வளர்ச்சிக்காகத் தான் இருக்கும். ரோட்டரியை வளர்க்க வேண்டும், சேவை மற்றும் திட்டப் பணிகளை அதிகரிக்க வேண்டும், உறுப்பினர் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்று வலியுறுத்துவார்கள். உறுப்பினர் எண்ணிக்கையை அதிகரிக்கும் போது நம்முடைய சேவைக்கு இன்னும் அதிகமான கரங்கள் கிடைக்கும்.

கடந்த 30 ஆண்டுகளாக உலக அளவில் ரோட்டரி உறுப்பினர்கள் எண்ணிக்கை 1.2 மில்லியன் என்று நாம் சொல்லிக் கொண்டே இருக்கிறோம். 2019-2020 ல் 420 புதிய சங்கங்கள் ஆரம்பித்தும் கூட உலக அளவில் ரோட்டரி உறுப்பினர்களின் எண்ணிக்கை 1.19 மில்லியன் மட்டுமே. கடந்த 5 வருடங்களில் ஆசியாவிலும், குறிப்பாக இந்தியாவிலும் 70% வளர்ச்சி இருக்கிறது. 2020 ஜூலை 1 நிலவரப்படி இந்தியாவில் 4816 ரோட்டரி சங்கங்களும் 174665 ரோட்டரி உறுப்பினர்களும் உள்ளனர். உலக அளவில் உறுப்பினர் எண்ணிக்கையில் மிகப்பெரிய மண்டலமான நமது ZONE-5 ல் 1144 ரோட்டரி சங்கங்களும்,45137 ரோட்டரி உறுப்பினர்களும் உள்ளனர். நமது மாவட்டத்தில் 2020-ஜூலை 1 அன்று 130 ரோட்டரி சங்கங்களும், 5148 உறுப்பினர்களும் உள்ளனர்.

நமது RIPE Rtn. சேகர் மேத்தா அவர்கள் உறுப்பினர் வளர்ச்சிக்கு முன்னுரிமை கொடுத்து செயல்பட இருப்பதாகவும், 2022 ஜூன் 30 க்குள் 1.3 மில்லியன் உறுப்பினர்கள் என்ற இலக்கை நாம் அடைய வேண்டும் என்று வலியுறுத்துவதோடு அதற்குப் பல ஆலோசனைகளையும் கூறியுள்ளார்கள்.

1) "Each one bring one" என்ற தாரக மந்திரத்தை மனதில் கொண்டு புதிய உறுப்பினர்களை ரோட்டரியில் இணைக்க வேண்டும்.

2) e-Club, Passport Club, Corporate Club, Alumni-based Club, Satellite Club, Next Generation Club என ஆரம்பித்து வளர்ச்சியை அதிகரிக்க வேண்டும்.

3) உறுப்பினர்களை தக்க வைத்துக் கொள்ள நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

4) Round Table, Jacyees, Indian Medical Association, Indian Builders Association போன்ற அமைப்புகளோடு தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இது ரோட்டரியை வளர்ப்பதற்கு உதவிகரமாக இருக்கும்.

5) அதிக உறுப்பினர்களை ரோட்டரிக்கு அறிமுகப்படுத்தியவர்களை சங்கத்திலும், மாவட்டத்திலும் அவர்களுடைய சேவையைப் பாராட்டுவதோடு அவர்களுக்கு பிரத்யோகமான பின் அணிவித்து கௌரவப்படுத்த வேண்டும்.

மேற்கண்ட முயற்சிகளை நாம் எடுத்தால் "முயற்சி திருவினையாக்கும்" என்பதற்கிணங்க நாம் நிச்சயம் சாதிக்க முடியும். இலக்கை அடைய முடியும். கோவிட்-19 பாதிப்புக்குள்ளான இந்த நேரத்தில் இதெல்லாம் சாத்தியமா? என்று நீங்கள் நினைக்கலாம். ரோட்டரி உறுப்பினர்கள் சவால்களை வாய்ப்புகளாக மாற்றியவர்கள் என்பதை கடந்த கால செயல்பாடுகள் மூலம் நாம் அறிந்து கொள்ளலாம்.

நமது ரோட்டரி மாவட்டம் 3000ல் 8 வருவாய் மாவட்டங்கள் உள்ளன. இதில் உள்ள மொத்த மக்கள் தொகை 139.15 இலட்சம். ஆனால் நமது ரோட்டரி மாவட்டத்தில் உள்ள மக்கள் தொகையின் படி பார்த்தால் 1 இலட்சம் பேருக்கு 39.85 ரோட்டரி உறுப்பினர்கள் தான் உள்ளனர். இன்னும் 2 வருடத்திற்குள் இந்த எண்ணிக்கையை இரட்டிப்பாக்க வேண்டும். "Nothing is impossible under the sun on this earth" என்று விவிலியம் சொல்கிறது. மாவட்ட அளவிலும், சங்க அளவிலும் நாம் கூட்டு முயற்சியோடு செயல்பட்டால் உறுப்பினர் வளர்ச்சியில் நாம் நம்முடைய இலக்கை அடைய முடியும். இதற்கு அனைத்து உறுப்பினர்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம்.



இந்த ரோட்டரி ஆண்டு மிகச் சிறப்பாக அமைய என்னுடைய மனமார்ந்த வாழ்த்துக்கள்.

**PDG. AKS. Rtn. R. தீனச்சந்திரன்**
**Regional coordinator (Membership) - Zone 5**
**RC of Madurai Metropolis**

# சேவைச் சரித்திரம் - ரோட்டரியில் பெண் உறுப்பினர்களின் வளர்ச்சி



பால்நிகர் நிலை (Gender Equality) நிலைப்படுவதற்கு ரோட்டரியின் பங்கு இன்றியமையாததாக விளங்கும் வகையில் ரோட்டரியில் பெண்கள் பங்கு அதிகரிப்பதில் ஆண்களுக்கு அதிக அக்கறை வேண்டும் என்பதைப் பல ரோட்டரி முன்னணித் தலைவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.

1905ல் ரோட்டரி துவங்கிய காலம் முதல் 1987 வரை பெண்கள் உறுப்பினராகும் வாய்ப்புத் தரப்படவில்லை. 1950 ஆம் ஆண்டுதான் அகமதாபாத் ரோட்டரி சங்கத்தின் மூலம் பெண்கள் உறுப்பினராகும் முதல் உரிமைக்குரல் எழுப்பப்பட்டது. “Male” என்ற சொல்லை ரோட்டரி சட்ட அமைப்பில் இருந்து நீக்குமாறு முன்மொழியப்பட்டது. ஆனால் இது நிராகரிக்கப்பட்டது. மீண்டும் 1964ல் இதனை முன்மொழிந்த இலங்கையின் ரோட்டரி சங்கத்திற்கும் இதே பதில் தான் கிடைத்தது. இதனைத் தொடர்ந்து அடுத்த முப்பது ஆண்டுகள் பெண்ணுரிமைப் போராட்டம் தொடர்ந்தது.

1970களில் பெண்கள் தொழில்முறைப் பொறுப்புகளில் முக்கியப் பங்கு வகிக்கத் துவங்கினர். இதனையொட்டி பால்நிகர் நிலையை (Gender Equality) வலியுறுத்தி பெண்களை ரோட்டரியில் உறுப்பினர்களாகச் சேர்க்க வேண்டும் என்ற கோரிக்கை மேலும் வலுப்பெற்றது. 1972ல் அமெரிக்காவிலிருந்து ஒரு ரோட்டரி சங்கம் பெண்களை உறுப்பினர்களாகச் சேர்க்க வேண்டும் என ரோட்டரி சட்டப் பேரவைக்கு (CoL) முன்மொழிந்தது. ஆனாலும் இந்தக் கோரிக்கை மறுக்கப்பட்டது.

1977ல் பிரேசில் நாட்டு ரோட்டரி சங்கம் பெண்களை கௌரவ உறுப்பினர்களாகச் சேர்க்க வேண்டும் என முன்மொழிந்தது. 1977ல் கலிபோர்னியா மாநிலத்தில் உள்ள துவார்த்தே ரோட்டரி சங்கம் ரோட்டரி சட்ட விதிமுறைகளுக்கு மாறாகப் பெண்களை உறுப்பினர்களாகச் சேர்த்தது. இதனால் 1978ல் இந்தச் சங்கம் ரோட்டரி அமைப்பிலிருந்து நீக்கப்பட்டது. இதையும் மீறி 1980லிருந்து 1986 வரை உலகெங்கிலும் பல சங்கங்களில் பெண்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டார்கள். துவார்த்தே ரோட்டரி சங்கம் சர்வதேச ரோட்டரி மீது நீதிமன்ற வழக்குத் தொடர்ந்தது. கீழ்நீதிமன்றம், உயர்நீதிமன்றம் என வழக்கு நீடித்து அமெரிக்க உச்சநீதிமன்றத்தை எட்டியது.

1950ல் துவங்கி 37 ஆண்டுகள் நீடித்த இந்தப் பெண்ணுரிமைப் போராட்டம் 1987ஆம் ஆண்டு மே மாதம் 4ம் நாள் அமெரிக்க உச்சநீதிமன்றம் ரோட்டரி அமைப்பு பெண்கள் உறுப்பினராகும் உரிமையை மறுக்கக்கூடாது என உத்தரவிட்டபோது முடிவுக்கு வந்தது.

இதனைத் தொடர்ந்து 1989ம் ஆண்டு கூடிய ரோட்டரி சட்டப் பேரவை (CoL) ஆண்கள் மட்டுமே உறுப்பினர்கள் என்ற நிலையை முழுவதுமாக நீக்கி உலகெங்கிலும் பெண்களை உறுப்பினர்களாகச் சேர்க்கலாம் எனச் சட்ட பூர்வமாக அறிவித்தது.

1990ல் உலகெங்கிலும் 20,200 பெண் உறுப்பினர்கள் இருந்தனர். இன்று இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட பெண்கள் ரோட்டரியில் உறுப்பினர்களாக உள்ளனர். 1995ல் எட்டு ரோட்டரி மாவட்டங்களில் மகளிர் ஆளுநர்கள் பொறுப்பேற்றனர். 2005ல் முதல் முறையாக ரோட்டரி அறக்கட்டளைக்குப் பெண் அறங்காவலர் ஒருவர் நியமிக்கப்பட்டார். 2008ல் முதன்முறையாக பெண் ஒருவர் சர்வதேச ரோட்டரி இயக்குநராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 2012ல் முதன்முறையாக பெண் ஒருவர் சர்வதேச ரோட்டரியின் பொருளாளராக நியமிக்கப்பட்டார். 2013ல் முதன்முறையாக பெண் ஒருவர் சர்வதேச ரோட்டரியின் துணைத்தலைவராகப் பொறுப்பேற்றார். மீண்டும் 2017ல் பெண் ஒருவர் துணைத் தலைவரானார். மூன்று பெண்கள் ரோட்டரி அறக்கட்டளை அறங்காவலர்களாகவும் பொறுப்பேற்றனர்.



2020–21ஆம் ஆண்டில் பெண்ணினத்தின் சார்பாகத் துணைத் தலைவராக ஒருவரும் இயக்குனர்களாக ஐவரும் பொறுப்பேற்றிருக்கின்றனர். இவற்றிற்கெல்லாம் முத்தாய்பாகத் தற்போது ரோட்டரியின் 115 ஆண்டு வரலாற்றில் முதன் முறையாகப் பெண் ஒருவரை 2022–23 ஆம் ஆண்டு பன்னாட்டுத் தலைவராகப் பொறுப்பேற்க தலைவர் தேர்வுக் குழு பரிந்துரை செய்துள்ளது. அவர் கனடா நாட்டைச் சேர்ந்த ஜென்னிபர் ஜோன்ஸ் பொதுச்சேவையில் சிறந்து விளங்கும் தொழில் வித்தகர்.

வாழ்க ரோட்டரி மகளிர்! வளர்க அவர்தம் பங்கு.

- Rtn. R. ராஜா கோவிந்தசாமி
District Secretary, TRF

# SUPER 66 RAINWATER HARVESTING PROJECT

Compiled by
**Rtn. R. Subramani @ RBS Mani**
மாவட்டச் செயலாளர், சிறப்பு திட்டங்கள்
**Mob : 73737 23456**




| UPCOMING EVENTS | |
|---|---|
| | September<br>**District RYLA** |
| | September 06<br>**Public Image Workshop** |
| | September<br>**Interact RYLA** |

| திட்டங்கள் |
|---|
| September 5, 2020<br>**One day RYLA** |
| September 19, 2020<br>**மகிழ்ச்சிப் பள்ளி (Happy School)** |

# உயிர் காப்பான் தோழன் - மரம்



ரோட்டரி உலகம் முழுவதும் சமூகம், மருத்துவம், பொருளாதாரம் என பல சமூக மாற்றங்களை தன் தொடர் சேவையால் சாதித்துக்காட்டி இருக்கிறது பல இடங்களில் பல காலங்களாக நாம் மரம் வளர்த்திருப்போம், மரம் நடும் விழாக்கள் நடத்தி இருப்போம். தற்பொழுது அதன் அடுத்த கட்ட முயற்சியாக குறுங்காடுகளை குறுகிய காலத்தில் உருவாக்க நமது ரோட்டரி மாவட்டம் 3000–ல் 2 லட்சம் மரக்கன்றுகளை இம்முறையில் வளர்ப்பதற்கு ஆளுநர் முன்னெடுத்திருக்கிறார். நம் எதிர்கால சந்ததியினருக்கு இயற்கையை மீட்டுக் கொடுப்போம் என்ற நம்பிக்கையோடு.

### “மியாவாக்கி” - ஜப்பான்

ஜப்பானைச் சேர்ந்த Akira Miyawaki என்பவர் உருவாக்கிய முறையே அவரது பெயரால் அழைக்கப்படுகிறது. ஜப்பானில் மரம் வளர்ப்பதற்கான நிலப்பரப்பு குறைவு என்பதாலே, இம்முறை மிகவிரைவில் வெற்றி பெற்றுள்ளது. இதனுடைய வளர்ச்சி பெரியளவில் இருப்பதும் மிக முக்கியக் காரணம்.

இம்முறையில் வளர்க்கப்படும் மரங்கள் வழக்கமாக வளரும் மரங்களைவிட 7 / 10 மடங்கு வேகத்தில் வளரும். அதாவது வளர 10 வருடங்கள் எடுக்கும் மரங்கள் ஓரிரு வருடங்களில் வளர்ந்து விடும். அபரிமிதமான வளர்ச்சி. மழைப் பொழிவை மீட்டுக் கொண்டு வருவது இதனுடைய ஆகச்சிறந்த பயன்.

நடுவதற்குண்டான முன்னேற்பாடுகளை திட்டமிட்டு எளிய முறையில் வளர்க்கலாம். மேலும் இயற்கையானது (Organic) என்பதால் சூழ்நிலையியல் பாதுகாக்கப்படும்.




### மியாவாக்கி - இந்தியா

இந்தியாவின் பல மாநிலங்களில் மரங்கள் வளர்க்கப்படுகின்றன. கேரளா அதிகளவில் செய்து வருகிறது. குறிப்பாக அரசாங்கமே இதில் ஈடுபாடு காட்டி வருகிறது.

தமிழகத்திலும் பல இடங்களில் அவரவர் வைத்துள்ள இடத்திற்கு ஏற்ப காட்டை அமைத்து வருகிறார்கள். மியாவாக்கி முறைக்கு குறைந்த இடமே போதுமானது என்பதால், எவரும் இதை முயற்சிக்கலாம். தன்னார்வலர்கள் இம்முறைக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறார்கள்.

தற்போது கோவை போன்ற இடங்களில் தன்னார்வலர்கள் இம்முறையிலேயே பெரியளவில் மரக்கன்று நட்டு வெற்றியும் பெற்று வருகிறார்கள்.

மிக எளிதாக இம்முறையில் செய்துவிடலாம். அதோடு இதில் உடனடியாகப் பழைய முறையைவிட மிகப் பெரிய பலனையும் பெற்று விடலாம். நாம் நட்ட மரத்தின் பலனை நாமே காணலாம்.

எனவே, இனி மரக்கன்றுகளை பெரியளவில் நட எவரும் திட்டமிட்டால், தயவுசெய்து பழைய முறையில் நட்டு உங்கள் சக்தியை வீணடிக்காதீர்கள்.

hard work என்பதைவிட smart work தான்சிறந்தது.

மியாவாக்கி முறையால் கிடைக்கும் நன்மைகள் :

- குறைந்த இடத்தில் அதிக எண்ணிக்கையில் மரங்களை வளர்க்கலாம். உதாரணமாக, 10,000 சதுரஅடி நிலத்தில், 1000 முதல் 2000 மரங்கள் வரை வளர்க்கலாம்.
- நெருக்கமான மரங்களால் பூமியில் வெப்பம் குறையும்.
- காற்றின் ஈரப்பதம் தக்க வைக்கப்படும்.
- குட்டிவனத்துக்குள் பறவைகள், புழு, பூச்சிகள், தேனீக்கள் அதிகளவு வாழும். இதனால், உயிர்ச் சூழல் மேம்படும்.
- கடற்கரைப் பகுதிகளில் இந்தக் காடுகள் இருந்தால், சுனாமியால் ஏற்படும் பேரிழப்பு தடுக்கப்படும்.
- நிலத்தடி நீர் அதிகரிக்கும்.



**Rtn. PP. C. கவிகார்த்திக்**
**Chairman, Super 66 (Special Projects)**
**RC of Arantangi The Fort City**

# Club Activities - July




Tiruchirapalli Shakthi : Installation - Jun 05



Thuraiyur Golden City : Installation - Jun 13



Kodaikanal : Installation - Jul 02




Theni Sangamam : Installation - July 06



Dindigul Mid-Town : 125 kg rice donated to பசியில்லா வடமதுரை - Jul 07



Tiruchirapalli Midtown : Installation - Jul 07




Kattur : Installation - Jul 09




Madurai Innovators : Installation - Jul 11

# Club Activities - July



Theni Metro Kings : Donating 100 kg rice to Compassion Charitable Trust, Shanmugasundarapuram - Jul 11



Trichy DC Pride : Installation - Jul 11



Batlagundu New Generation : COVID 19 testing carried out at Little Drops Old Age Home - Jul 14



Alangudi Central : Installation - Jul 15



Dindigul West : Donating a cricket bat worth ₹ 10,000 to Mr. Ajith Mani, GTN Arts College - Jul 15



Trichy City & Trichy Heritage : Blood donation camp - Jul 16



Ariyalur : Installation - Jul 18



Tiruchirapalli Shakthi : உடல்நலம் காப்போம் distribution of homeopathic medicine - Jul 20

# Club Activities - July



Pudukkottai City : Installation - Jul 21



BHEL City Tiruchirapalli : Donating medical equipment to MGMGH Trichy - Jul 21



Manavai Queens : Awareness Programme on COVID 19 - Jul 22




Jayankondam : Installation - Jul 23




Manapparai : Donating a thermal scanner and distribution of கபசுரக் குடிநீர் - Jul 24




Pudukkottai Palace City : Installation - Jul 24



Madurai Downtown : Installation - Jul 25



Tiruchirapalli Diamond City : Installation - Jul 26

# Club Activities - July



Madurai Blossom : Distribution of கபசுரக் குடிநீர் ayurvedic sanitizer, arsenicum album and masks - Jul 27



Pudukkotai Central : Blood donation camp - Jul 27




Tiruchirapalli Phoenix : Installation - Jul 27



Madurai Innovators : Donating ₹ 10,000 towards a girl child's education at Villapuram - Jul 28




Dalmiapuram : Installation - Jul 30



Thuraiyur Perumal Malai : Donating digital thermometers and pulse-oxymeters to Thuraiyur Municipality - Jul 30

| Month | Status | Club Level | Regional Level |
|---|---|---|---|
| August | ✔ | Rain Water Harvesting | Tree Plantation |
| September | | One Day RYLA | 32 Happy Schools |
| October | | Health Kit Distribution | Polio Bus |
| November | | Vocational Projects | Job Fair |
| December | | Health Camp | Mega Cardiac Camp |
| February | | Rotary Information Board | Traffic Awareness |

**Club Level Projects : 1st Saturday of the month | Regional Level Projects : 3rd Saturday of the month**

# FOREVER IN OUR HEARTS



**PDG. Rtn. AN.M. Muthuraman**
RC of Tiruchirappalli Fort



**PP. Major Donor Rtn. R. Muthusamy**
Regional Coordinator, Best Team
RC of Pudukkottai Palace City

# Advertisement

## With Best Compliments From



Proprietor, Sri Laxmi Export, Karur
Chairman, Akathiya Faarms Pvt Ltd,
Chairman, Pixel Towel Pvt Ltd,
Partner, Star Matriculation Hr Sec School, Karur

**Rtn V. Ramesh**
RC. of Karur Texcity
rameshtexcity@gmail.com
+91 9443143908

## My Life in Rotary

***23 years of Rich Rotary Experience, Joined RC of Karur Texcity in 1997***

| | | |
|---|---|---|
| Club Secretary | 1998-99 | PDG R.Thangaraj Bose |
| Secretary – Membership Seminar | 2006-07 | PDG Dr.Manickam Rajasekaran |
| Secretary – District Assembly | 2007-08 | PDG Rajadurai G.Micheal |
| Club President | 2009-10 | PDG A.Purushothaman |
| Secretary – Dist. Team Training Seminar | 2010-11 | PDG T.Valliappan |
| Secretary – District Conference | 2011-12 | PDG S.Rajendran |
| Assistant Governor | 2012-13 | PDG Y.Kumanan |
| District Chairman - Membership | 2013-14 | PDG S.Gopal |
| District Chairman - Membership | 2014-15 | PDG P.Jagannathan |
| District Chairman - Membership | 2015-16 | PDG R.Theenachandran |
| District Secretary – Public Image | 2016-17 | PDG M.Muruganantham |
| Assistant District Trainer | 2017-18 | PDG P.Gopalakrishnan |
| Chairman – District Conference | 2017-18 | PDG P.Gopalakrishnan |
| Chairman – Annual Program Fund | 2018-19 | PDG RVN Kannan |
| Grants Sub-Committee Chair | 2019-20 | PDG Dr.A.Zameer Pasha |
| District Chairman, New Member Orientation | 2020-21 | DG A.L.Chockalingam |
| Chairman- Youth Service Seminar | 2020-21 | DG A.L.Chockalingam |

### *As President of RC of Karur Texcity*

- Inducted 37 New Members to club
- Executed 202 service projects
- Secured 13 district awards including Best President, Best Club

### *As District Membership Chair*

- Introduced new member kit for the first time in the district history
- Conducted membership workshop breakfast meetings in all the regions in our district
- District 3000 stood first in Zone 5 in membership
- Zone 5 was top on membership
- Instrumental in crossing 5000 mark in membership in our District 3000

### *Contribution to the Foundation*

- Major Donor – Level 1

**For placing an advt, kindly contact gmlrid3000@gmail.com**

# கொடுத்துச் சிவந்த கரங்கள்

## Arch Klumph Society Members



Rtn. Er. M. Muruganandam
& Rtn. M Sumathi



Rtn. Theenachandran &
Rtn. Vasanthi Theenachandran



Will it be you ?

## Major Donors

| Level 4 | |
|---|---|
| Ladies Forum | District 3000 |
| Karur Vysya Bank Limited | Karur Texcity |
| Rtns. Raguraam, R.S.K and Sumathi Raguraam | Dindigul |
| GHCL Foundation | District 3000 |
| **Level 3** | |
| GEMS School | District 3000 |
| Rtn. A Zameer Pasha | Tiruchirapalli Midtown |
| Rtns. L. Subbiah and Meena Subbiah | Karur Texcity & Karur Angels |
| Rtns. RVN. Kannan and Sarala Kannan | Madurai Down Town & Madurai Malligai |
| Rtns. Arunachalam, Purushothaman and P. Meera | Madurai North West & Madurai Meenakshi |
| Rtns. Basker Chockalingam and Malathi Basker | Karur |

** List continues in the next issues

## TRF RECOGNITION OF DONORS

### Arch Klumph Society

When cumulative donations reach $250,000, the Rotarian is inducted into the Arch Klumph Society. Recognition includes an induction ceremony and placing a picture and biography in the Arch Klumph Society interactive gallery at the Rotary International headquarters in Evanston, Illinois, USA. Following are the levels of recognition in the Arch Klumph Society;

| | |
|---|---|
| Trustees Circle | $ 250,000 to $ 499,999 |
| Chair's Circle | $ 500,000 to $ 999,999 |
| Foundation Circle | $ 1,000,000 to $ 2,499,999 |
| Platinum Trustees Circle | $ 2,500,000 to $ 4,999,999 |
| Platinum Chair's Circle | $ 5,000,000 to $ 9,999,999 |
| Platinum Foundation Circle | $ 10,000,000 and above |

### Major Donor

When cumulative donations reach $10,000, the Rotarian is recognized as a Major Donor. Following are the levels of recognition of Major Donors;

| | |
|---|---|
| Level 1 | $ 10,000 to $ 24,999 |
| Level 2 | $ 25,000 to $ 49,999 |
| Level 3 | $ 50,000 to $ 99,999 |
| Level 4 | $ 100,000 to $ 249,999 |

For private circulation only

Published by
Rtn. A.L. Chokkalingam,
District Governor,
No 79, Kambar Street, Charles Nagar,
Pudukkottai,
Tamil Nadu - 622 001

Kindly send articles, news of events and projects with a brief writeup and good resolution photographs for publication to gmlrid3000@gmail.com before the end of each month.

Printed by Sree Vinayaga Screens, S.S. Colony, Madurai - 625 010
Ph. : 0452-2600300, 999 444 6030